யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஐ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு மற்றும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 3603 - எஸ்ஆர்ஐ மற்றும் 3604 - எஸ்ஆர்ஐ (மேலதிக நிதியளிப்பு) ஆம் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை, வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வட மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது.

செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவரிடமிருந்தான கடன் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை காரணமாக 2015 ஒக்தோபர் 06 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது, ஏனென்றால், சுத்திகரிப்பு பொறிக்கு இரணைமடு குளத்திலிருந்து நீர் வளம் போதாமையால் செயற்திட்ட நோக்கெல்லை மீளமைக்கப்படுகின்றது. ஆகவே, 2017 திசெம்பர் 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,256 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153 மில்லியனாக இருந்தது. அதில், ரூபா 18,240 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,016 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 44 இன் பிரகாரம் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 2,723,083,339 ஆக இருந்தது எவ்வாறாயினும் பூர்த்தியாக்கப்பட்ட வேலையாக நடைபெறும் வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,489,262,268 ஆகும். இதன் விளைவால் ரூபா 233,821,071 ஆல் நடைபெறும் வேலைகள் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டம் தற்போது பூர்த்தியாக்கபட்ட வேலைகளின் பெறுமதியுடன் சமப்படுத்துவதற்கு குறைபாட்டு தொகையை பொதுப் பேரேட்டில் திருத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | அவசியமான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கட்ன உடன்படிக்கை இல. L3604 இன் கீழ் பெறப்பட்ட கடனிற்காக செலுத்த வேண்டிய ரூபா 57,685,624 வட்டி மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப் பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் நடைமுறைப் பொறுப்புக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டம் ரூபா 57,685,623.96 வட்டிக் கட்டணங்களிற்கான தாமதமில்லாமல் பொது பேரேட்டு முறைமையில் பதியப்படும் எனத் தெரிவித்தது. | தவறுகளை திருத்துவதற்கு முறையான சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் 39(அ) ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் ரூபா 1,169 மில்லியன் தொகையான நாணய சமநிலை சீராக்கல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | NWSDB ஆனது செயற் திட்டத்தினுடைய நிதிக் கூற்றுக்களில் நாணய சமநிலை சீராக்கல்கள் செய்வதற்கு தீர்மானித்திருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான பௌதீக முன்னேற்றம்

| | செயற்திட்டக் கூறு | 2024 திசெம்பரி 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க் கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப் பட்ட செயலாற்றல் சதவீதம் | | | |
| (அ) | யாழ்ப்பாண நகர பகுதியில் விநியோக வலையமைப்பு. | 100 | 80 | நிடித்தல் காத்தின்படி விநியோக முறைமையின் நிர்மாணம் 2025 யூலை அளவில் பூத்தியாக்கப்பட வேண்டும். | PMCIU விரைவில் மிகுதியாக இருக்கின்ற வேலைகள் பூர்த்தியாக்குவதற்கு வினைத்திறனுடன் செயற்படுகின்றது. | மேலும் தாமதமில்லாமல் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுண்ணாகம் நீர் வழங்கல் திட்ட நிர்மாணம் | 0 | 0 | ஒப்பந்தம் வழங்கல் நடைமுறை பாரிய செயற்திட்டங்களின் மீள் உபாயம் மற்றும் தடுத்தல் குழுவால் செய்யப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என கவனிக்கப்பட்டது. | PMCIU இந்த திட்டத்தை அமுலாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. | மேலும் தாமதமில்லாமல் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | எந்திரவியல், மின்சாரம் மற்றும் SCADA பொதிகள் | 100 | 18 | SCADA முறைமையுடன் சேர்த்து மின்சார மற்றும் எந்திரவியல் உபகரணங்கள் பொருத்துதலின் பூத்தியாக்கல் செயற்திட்ட முழுமையான செயற்பாட்டை | PMU ஆனது வேலைகளின் பூர்த்தியாக்கலை உறுதிப்படுத்துவதற்கு தேவையான படிமுறைகளை எடுத்திருந்தது. | மேலும் தாமதமில்லாமல் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்வதற்காக ஆபத்தில் உள்ளது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கு நீர் வழங்குவதற்கு 2021 இல் நிர்மாணிக்கப்பட்ட 24,000 m³/நாள் கடல் நீர் சுத்திகரிப்பு பொறி 2024 ஒக்தோபர் 14 பூர்த்தியாக்கப்பட்டது. ஆனால் 2025 சனவரி 25 இல் உள்ளவாறு இது வடிவமைப்பை விட குறைவாக 1,161 m³/நாள் இற்கு மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டது. எவ்வாறாயினும் முழுமையான செயற்பாட்டு செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் (PMU) உடனடியாக சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PMCIU ஆனது முழு மட்ட நீர் வழங்கலை இயலக் கூடியவாறு M&E SCADA ஒப்பந்தத்தை அமுலாக்கப்படுகின்றன. அதேநேரம் இடையில் பொது மக்களிற்கு நீர் வழங்குவதற்கு தற்காலிக ஒழுங்குகளை பராமரிக்கின்றது. | பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடல் நீர் சுத்திகரிப்பு பொறியின் செயற்பாடு மற்றும் பராமரிப்புகளின் (O&M) ஏழு ஆண்டுகளாக ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 3,694 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கடன் உடன்படிக்கை 2026 யூன் 30 இல் உடன்படிக்கை காலாவதியாகி இருந்தது. O&M இன் இரண்டு ஆண்டுகள் மாத்திரம் நிதியளிப்பு வழங்கப்பட்டதுடன் மீகுதியான ஐந்து ஆண்டுகளிற்காக குறிப்பிடத்தக்களவு விடுவிக்கபடுகின்றன. கடன் காலப்பகுதி நீடிப்பதற்கு கடனளிக்கும் முகர்களுடன் உடன்படிக்கை எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | ADB ஆனது காலக் கிரமத்தில் பதிலளிப்பதற்கு உடன்பட்டதுடன் PMCIU/JKWSSP கடன் விரிவாக்கலிற்காக முக்கியமான ஆதாரங்களை தயாரிக்கின்ற செயற்பாட்டில் உள்ளது. | இந்த பொறி பராமரிக்க மற்றும் பொருத்தமான பயன்படுத்த வைத்திருக்க நிதி வளங்களை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | கடல் நீர் சுத்திரிப்பு பொறிக்காக புதுப்பிக்ககூடிய மின்சக்தி தீர்விற்காக மேலதிக நிதியளித்தலில் ஐ.அ.டொலர் 4 மில்லியன் சேமிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஈடுபட்டு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தை நெறிப்படுத்துவதற்கு 2020 திசெம்பர் 22 இல் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆரம்ப சாத்தியவள கற்கை சூரிய சக்தி மின்பொறி சரியான தெளிவாக இனங்கண்டிருந்த போதிலும் இந்த கூறிற்கான ஒப்பந்தம் வழங்கப் பட்டிருக்காததுடன் ADB 2025 யூன் 03 வரை பொறி நிர்மாணத்திற்கான நிதியளிப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. | NWSDB ஆனது வட மாகாணத்தில் 10 MW சூரிய மின்சக்தி பொறியை நிர்மாணிப்பதற்கு உதவியளிக்க வேண்டியிருந்தது. 2025 ஏப்ரல் மாதத்தில் ADB மிசன் வருகை தந்த காலத்தின் பொது ADB ஆனது மீளாய்வு செயவதற்கும் காலக் கிரமத்தில் அரசாங்கத்திற்கு பதிலளிக்கவும் உடன்பட்டது. | செயற்திட்டம் திட்டமிட்டவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நம்பகமான ஐஸ் வழங்கல் மற்றும் சிவில் நிர்மாணத்துடன் மீன்பிடி | செயற்திட்டமானது ஐஸ் தொழிற்சாலையின் சுமூகமான | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை |

| | | |
|---|---|---|
| சமூகங்களிற்கு ஆதரவளிப்பதற்கு செயற்திட்டத்தினுடைய வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலை 2018 நவம்பர் 29 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஐஸ் உற்பத்தியின் வழங்கல், பொருத்துதல், பரீட்சித்தல் மற்றும் தொடங்குதல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் 2024 சனவரி 5 இல் வழங்கப் பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2025 சனவரி 23 இல் பௌதீக பரிசோதனையில் இது இதுவரை செயற்படாதிருந்ததுடன் மீன்பிடி சமூகங்களிற்கு ஐஸ் வழங்கல் இன்னமும் தொடங்கப்பட்டிருக்காமை வெளிப்பட்டது. | செயற்பாடுகளை உறுதிப்படுத்துவற்கு உடனடியாக அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒப்பந்தகாரரை அறிவுறுத்தியிருந்தது. மற்றும் நலனாளிகளிற்கு கையளிக்கும் நோக்கில் PMCIU ஆல் நெருக்கமாக கண்காணிக்கவும் அறிவுறத்தப்பட்டது. | அடைவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 காணிச் சுவீகரிப்பு தொடர்பான பிரச்சனைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|
| நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக 53 காணித்துண்டுகள் இனங் காணப்பட்டிருந்தது. அந்த காணிகளில் 30 இற்கான கொள்வனவு அல்லது சுவீகரிப்பு நடைமுறை பூர்த்தியாகாமல் இருந்தது. சுகாதார கூறிற்காக 16 துண்டுகள் இலக்கிடப்பட்டு 14 துண்டுகள் மாத்திரம் 38(அ) கட்டளையின் கீழ் சுவீகரிக்கப்பட்டது. சுகாதார கூறுகள் தற்போதைய செயற்திட்ட நோக்கெல்லையில் அகற்றப்பட்ட போதிலும் பகுதியளவு சுவீகரிக்கப்பட்ட காணிகள் பாதுகாப்பதற்கு எவ்வித நடைமுறைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PMCIU எதிர்காலத்தில் கழிவகற்றல் செயற்திட்டங்களை சுமூகமாக அமுலாக்குவதற்கு வேண்டப்பட்ட காணிகளை பாதுகாப்பதற்கு காணி சுவீகரிப்பு நடைமுறை தொடர்கின்றது. | எதிர்காலத்தில் செயற்திட்ட அமுலாக்கலில் தாமதங்களை தவிர்ப்பதற்கு காணி சுவீகரிப்பு மற்றும் கொள்வனவு நடைமுறை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |